நான் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டேன்

நான் தேவனுடைய பிள்ளை.[1]

நாம் கிறிஸ்துவின் நண்பன்.[2]

நான் என் விசுவாசத்தினால் நீதிமான்
ஆக்கப்பட்டிருக்கிறேன்.[3]

நான் தேவனோடு இசைந்து, அவருடன் ஒரே
ஆவியாய் இருக்கிறேன்.[4]

நான் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டேன்,
நான் தேவனுக்கு சொந்தம்.[5]

நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாய்
இருக்கிறேன்.[6]

நான் பரிசுத்தவான்.[7]

நான் தேவனுடைய பிள்ளையாய்
ஏற்றுக்கொள்ளப்பட்டேன்.[8]

நான் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை
பரிசுத்த ஆவிவானவர் மூலம் பெற்றுள்ளேன்.[9]

நான் மன்னிக்கப்பட்டு, பாவத்திலிருந்து விடுதலை
பெற்றேன்.[10]

நான் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவன்/வள்.[11]

[1] யோவான் 1:12
[2] யோவான் 15:15
[3] ரோமர் 5:1
[4] 1 கொரி. 6:17
[5] 1 கொரி. 6:19
[6] 1 கொரி. 12:27
[7] எபே. 1:1
[8] எபே. 1:5
[9] எபே. 2:18
[10] கொலோ. 1:14
[11] கொலோ. 2:10

யோவான் 1:12
அவருடைய நாமத்தின்மேல்
விசுவாசமுள்ளவர்களாய்
அவரை ஏற்றுக்கொண்டவர்கள்
எத்தனைபேர்களோ,
அத்தனைபேர்களும் தேவனுடைய
பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு
அதிகாரங்கொடுத்தார்.

யோவான் 15:15
இனி நான் உங்களை
ஊழியக்காரரென்று
சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன்
தன் எஜமான் செய்கிறதை
அறியமாட்டான். நான் உங்களைச்
சிநேகிதர் என்றேன், ஏனெனில் என்
பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட
எல்லாவற்றையும் உங்களுக்கு
அறிவித்தேன்.

ரோமர் 5:1
இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே
நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,
நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில்
சமாதானம் பெற்றிருக்கிறோம்.

1 கொரிந்தியர் 6:17
அப்படியே
கர்த்தரோடிசைந்திருக்கிறவனும்,
அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.

1 கொரிந்தியர் 6:19
உங்கள் சரீரமானது நீங்கள்
தேவனாலே பெற்றும்
உங்களில் தங்கியும் இருக்கிற
பரிசுத்த ஆவியினுடைய
ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும்
அறியீர்களா?

1 கொரிந்தியர் 12:27
நீங்களே கிறிஸ்துவின்
சரீரமாயும், தனித்தனியே
அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.

எபேசியர் 1:1
தேவனுடைய சித்தத்தினாலே
இயேசுகிறிஸ்துவினுடைய
அப்போஸ்தலனாகிய பவுல்,
எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள்
விசுவாசிகளாயிருக்கிற
பரிசுத்தவான்களுக்கு…

எபேசியர் 1:5
பிரியமானவருக்குள் தாம் நமக்குத்
தந்தருளின தம்முடைய கிருபையின்
மகிமைக்குப் புகழ்ச்சியாக,

எபேசியர் 2:18
அந்தப்படியே நாம் இருதிறத்தாரும்
ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில்
சேரும் சிலாக்கியத்தை அவர்
மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.

கொலோசெயர் 1:14
(குமாரனாகிய) அவருக்குள்,
…பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு
உண்டாயிருக்கிறது.

கொலோசெயர் 2:10
மேலும் சகல துரைத்தனங்களுக்கும்
அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற
அவருக்குள் நீங்கள்
பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au